1979 மார்ச் 14]

தெருக்களிலும், பொதுமக்கள் கூடுமிடங்களிலும், பொது மக்களுடன் தொழுநோய்ப்பிச்சைக்காரர்கள் கலந்து இருக்காத படி காவல்துறையினர் கண்காணித்து அவர்களை அகற்றி விடுகிறார்கள். ரயில் நிலையங்கள், கடைவீதிகள், ஆலயங்கள், கடற்கரை முதலிய இடங்களில் சென்னை நகரத்தில் பகற் பொழுதில் பிச்சைக்காரர்களை வளைத்துப் பிடிக்கவும் அதற்கான தீவிர தனி நடவடிக்கை எடுக்கவும், தனது பணியாளர்கள், பிச்சைக்காரர்கள் மீது வழக்குகள் பதிவு செய்வது குறித்து காவல்துறைத் துணை ஆணையாளர் ஆய்வு செய்யவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

[முற்பகல் 10.00]

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) துணைக் கேள்விகள் அனுமதிப்பது குறித்து.

<u>திரு. துரை கோவிந்தராஜன்</u> : கேள்வி நேரத்தின் போது, ஆளும்கட்சி தரப்பிலிருந்து ஐந்தாறு பேர்களுக்கு மட்டுமேதான் சந்தர்ப்பம் தந்திருக்கிறீர்கள். இனிமேலாவது ஆளும்கட்சித் தரப்பிலுள்ள உறுப்பினர்களுக்கு அதிகமான துணைக் கேள்விகள் கேட்பதற்கு இடம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆளும் கட்சித் தரப்பிலிருந்து கைதட்டல்..)

<u>திரு. சி. ஆறுமுகம்</u> : கேள்வி நேரத்தில் எதிர்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குத்தான் அதிக வாய்ப்புத் தர வேண்டும். அது தான் மரபாக இருந்து வந்திருக்கிறது. ஆளும் கட்சிக்கு இதில் என்ன சங்கடம் என்று தெரியவில்லை.

(திரு. கு. ரமணி, திரு. எஸ். ஆர். இராதா ஆகியோர் எழுந்திருந்தார்கள்..)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இரண்டு பேர்களும் எழுந்து நின்றால் நான் யாரை அழைப்பது? நீங்களே ஒரு முடிவுக்கு வாருங்கள். திரு. ரமணி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. கு. ரமணி : நேற்றையதினமும் இது போல் தாங்கள் கேள்வி நேரத்தை முடித்தபோது, இன்னும் ஐந்து நிமிடங்கள், பத்து நிமிடங்கள் நீடித்து கேள்விகளை முடித்துக்கொள்ளுங்கள் என்று கேட்டோம். அவ்வாறு தாங்களும் அனுமதித்தீர்கள். முன்பும் இப்படிப்பட்ட வழக்கம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அது போல் இன்றைய தினமும் சற்று கேள்வி நேரத்தை நீட்டித்து கேள்விகளை கேட்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் பத்து கேள்விகள் இருக்கின்றன. இதையெல்லாம் முடிப்பதற்கு இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். நேற்று இரண்டு மூன்று கேள்விகள் மட்டும் இருந்தது, ஆதலால் பத்து நிமிடத்தில் கேள்வி நேரத்தை முடித்துவிட்டோம். இன்று, நேற்றைக்கு ஒத்தி வைத்த கேள்விகள் 2, இன்னும் பாக்கியுள்ள கேள்விகள் 9, ஆக 11 கேள்விகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் முடிக்கவேண்டும் என்றால், இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். அதே நேரத்தில் ஆளும் கட்சித் தரப்பில் அதிகமான பேர்களை அழைக்கவில்லை என்றும் சொல்லுகிறார்கள். இந்த நிலையில் இன்னும் ஒரு மணி நேரம் வேண்டும் என்று கேட்டால், அது இயலாத காரியம்.

திரு. கு. ரமணி : நான் ஒரு மணி நேரம் நீடிக்கவேண்டும் என்று கேட்கவில்லை. பட்டியலிலுள்ள கேள்விகளை எல்லாம் முடித்தாக வேண்டும் என்று கேட்கவில்லை. ஐந்து நிமிடம் அல்லது பத்து நிமிடம் நீட்டித்தால், அதில் எவ்வளவு துணைக் கேள்விகள் கேட்கலாமோ அந்த அளவுக்கு துணைக்கேள்விகள் கேட்கட்டும். அதைச் செய்தால் போதும் என்று தான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்வி, இரண்டு கேள்வி என்றால் பத்து நிமிடம் நீடித்து நடத்தினால் கேள்விகள் முடிந்துவிடும். இருக்கின்ற கேள்விகளை எல்லாம் முடிக்க வேண்டும் என்றால், இன்னும் ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகும் அப்படி இதிலே ஒரு மணி நேரத்தை எடுத்துக்கொண்டால். மற்ற நிகழ்ச்சிகள் நின்று விடும். அதனால் தான் இத்துடன் கேள்விகளை நிறுத்திக் கொண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொண்டேன்.

(ஆ) உரிமை மீறல் அறிவிப்பு குறித்து.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி இன்னும் ஆராய்ந்து முடிவு எடுக்கவில்லை. அதைப்பற்றி இப்போது பேச முடியாது. அது நாளையோ மறு நாளோ எடுத்துக் கொள்ளலாம்.